# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

## அ.சா.9 (LW22)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கிருஷ்ணவேனி | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **23.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 ஆஜர்.

**<u>மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அம்பாத்துரை காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.2022 வடமதுரை காவல் நிலையத்தில் சார்வு ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை சுமார் 10.00 மணிக்கு முத்தனங்கோட்டையை சார்ந்த சாந்தி ஷீலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வழக்கின் தன்மைக்கேற்ப வடமதுரை காவல் நிலைய குற்ற எண். 294/2022 சட்டப்பிரிவு 302 இதச வாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.7 ஆக** குறியிடப்படுகிறது. பின்பு புகார்தாரரின் புகாரையும், முதல் தகவல் அறிக்கையும் வேடசந்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை மேல்விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வடமதுரை காவல்நிலையம் வடமதுரையில் எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால் வடமதுரை இரயில்வே ஸ்டேசன் ரோட்டில் அமைந்துள்ளது. திண்டுக்கல்–திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 1 கிமீ தொலைவில் வடமதுரை காவல்நிலையம் அமைந்துள்ளது. 24.08.2022ம் தேதியன்று எங்களது காவல்நிலையத்திலிருந்து வடமதுரை தேசிய நெடுஞ்சாலையில் வாகன தணிக்கை பணிமேற்கொண்டேனா என்றால் தினசரி செய்து வழக்கம். அன்றைய தேதியில் வாகன தணிக்கைக்காக யார் பணியமர்த்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. இரவு ரோந்திற்காக எங்களது காவல்நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர், சார்பு ஆய்வாளர், காவலர்கள் செல்வது வழக்கம். 24.08.2022 அன்று இரவு ரோந்து பணியை யார்

தலைமை ஏற்றுச் சென்றது அதில் யார் யார் சென்றார்கள் என்பது ஞாபகம் இல்லை. 24.08.2022 அன்று இரவு ரோந்து பணியில் ஈடுபட்டவர்களின் பெயர் நிலையத்தில் உள்ள டியூட்டி ரூஸ்டரில் பதிவு செய்யப்பட்டிருக்கும். இரவு ரோந்து பணி எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு பணி முடிக்கப்படும் என்றால் இரவு 09.00 மணியிலிருந்து காலை 06.00 மணிக்கு முடிக்கப்படும், 24.08.2022 அன்றும் அவ்வாறே ரோந்து பணி நடைபெற்றது. அன்றைய தினம் நான்தான் ரோந்து பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடமானது எந்த கிராமத்தை சேர்ந்தது என்றால் வேல்வார்கோட்டை கிராமத்தை சேர்ந்தது. சம்பவ இடம் யாருக்கு சொந்தமானது என விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆய்வாளர் விசாரித்திருப்பார். அன்றைய தினம் எங்கள் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு முறைக்காவல் பணிக்கு யார் சென்றார்கள் என்பது குறித்து நான் முதல் தகவல் அறிக்கை பதியும் போது தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி 24.08.2022 அன்றும் மறுதினமும் எங்கள் நிலையத்திற்கு முறைக்காவல் பணிக்கு சென்றவர்கள் யாரும் வழக்கு தொடர்புடைய விவரங்கள் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 24.08.2022, 25.08.2022 தேதிகளில் எங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட முத்தனங்கோட்டை பகுதியிலிருந்து யாரேனும் காணாமல் போய்விட்டார்கள் என்பது சம்மந்தமான புகார் வரப்பெற்றது என்றால் புகார் வரவில்லை. முத்தனங்கோட்டை கிராமமானது காவல்நிலையத்திலிருந்து சுமார் 3 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. மூனான்டிபட்டி கிராமமானது காவல்நிலையத்திலிருந்து சுமார் 3 1/2 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. முத்தனங்கோட்டை கிராமமானது தேதிய நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 1 1/2 கிமீ பிரிவில் அமைந்துள்ளது. மூனான்டிபட்டி கிராமம் தேதிய நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 1 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. மூனான்டிபட்டியிலிருந்து காவேரி மில்லானது சுமார் 1 கீமீ தொலைவில் அமைந்துள்ளது. முத்தனங்கோட்டையிலிருந்து காவேரி மில்லானது சுமார் 1 கீமீ தொலைவில் அமைந்துள்ளது. 26.08.2022 அன்று காவல்நிலையத்தில் நான் எத்தனை மணிநேரம் பணியில் ஈடுபட்டேன் என்றால் காலை 07.00 மணியிலிருந்து இரவு வரை இருந்தேன். எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை. எங்கள் காவல்நிலையத்திற்கு எழுத்து பூர்வமாக புகார் அளிக்கப்படும் வரையில் வான்வழி தகவலோ அல்லது மற்ற விதத்தில் ஏதேனும் தகவல் நிலையத்திற்கு வரப்பெற்றதா என்றால் ரோந்து காவலுக்கு காலையில் தகவல் கிடைக்கப்பெற்று சம்பவ இடத்திற்கு சென்றனர். காலை 10.00 மணிக்கு புகார்தாரர் நிலையம் ஆஜராகி புகார் அளித்தார். ரோந்து காவலுக்கு யார், யார் பணிக்கு சென்றனர், அவர்களுக்கு எந்த விதத்தில் தகவல் கிடைக்கப்பெற்றது போன்ற விவரங்களை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. ரோந்து காவலர்கள் காவல்நிலையத்தில் ஒரு சம்பவ இடம் செல்வதாக மேல்அதிகாரி என்ற முறையில் என்னிடமோ அல்லது காவல்நிலையத்தில் பதிவு செய்து சென்றனர் என்பது குறித்து சொல்ல முடியுமா என்றால் அது குறித்து காவல் ஆய்வாளர்தான் பொறுப்பு அதிகாரி ஆவார். ரோந்து காவலர்கள் என்னிடம தெரிவித்து விட்டு சென்றனர். அவர்கள் எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றார்கள் என்றால் குறிப்பாக எனக்கு தெரியாது. அவர்கள் பணிக்கு சென்றதிலிருந்து காலை 10.00 மணி வரை சம்பவம் தொடர்பாக தகவல் வந்ததா என்றால் சுமார் 09.00 மணிக்கு ராம்குமார் காவேரி மில் அருகே மேற்குபக்கத்தில் உள்ள முட்புதர் அருகே இறந்து கிடப்பதாக போன் மூலம் தகவல் வந்தது. சுமார் 09.00 மணிக்கு எனக்கு தகவல்

கிடைக்கப் பெற்ற பின்பு இந்த வழக்கு தொடர்பாக நான் எடுத்த நடவடிக்கை என்பது பற்றி சொல்ல முடியுமா என்றால் தகவல் கிடைக்கப்பெற்ற உடன் காவல் ஆய்வாளருக்கு தெரியப்படுத்தினேன். நான் சம்பவ இடம் உடனடியாக சென்றேனா என்றால் சென்றேன். நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு போனேன். நான் சம்பவ இடம் சென்ற போது அங்கு நிலைய காவலர்கள் மற்றும் ஊர் மக்கள் கூட்டமாக இருந்தார்கள். அவ்வாறு கூட்டமாக இருந்த நபர்களில் ஆண்கள் எத்தனை பேர்கள், பெண்கள் எத்தனை பேர் என குறிப்பாக சொல்ல இயலாது. காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு வந்தார் என்பது ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சுமார் 09.00 மணிக்கு ராம்குமாரின் குடும்த்தினர் வந்து விட்டனர். சம்ப்வ இடத்திலிருந்து வழக்கின் புகார்தாரரை யார் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் புகார்தாரர்தான் அவராகவே நிலையம் வந்தார். அவரோடு யார், யார் வந்தார்கள் என்பது பற்றி சொல்ல முடியுமா புகார்தாரர் அவரது அப்பாவும் வந்திருந்தார்கள். வழக்கு பதிவு நடவடிக்கை மேற்கொள்வதற்காக சம்பவ இடத்திலிருந்து நிலையம் வந்து விட்டேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் புகார்தாரர் எழுதிதான் நிலையம் கொண்டு வந்தார். புகார்தாரர் புகாரில் தேதி, நேரம், இடம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் எதிரி பற்றிய விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுப்பதில் தாமதத்திற்கான காரணத்தை காலம் 8 ல் தெரிவிக்கவில்லை என்றால் புகார்தாரர் தகவல் கிடைத்தவுடன் எங்கள் காவல்நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தார். இவ்வழக்கில் இறந்த நபரான ராம்குமார் 24.08.2022 யிலிருந்து காணவில்லை என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் காணவில்லை என்ற புகார் என்னிடம் வரவில்லை என்பதால் எனக்கு தெரியவில்லை. புகாரானது 24.08.2022 அன்று இரவிலிருந்து ராம்குமார் காணவில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரிடம் புகார் கொடுக்க ஏன் காலதாமதம் என கேட்டேனா என்றால் 24.08.2022 முதல் புகார்தாரரின் தம்பி வீட்டிற்கு வரவில்லை என்பதால் உறவினர் மற்றும் நண்பர்களிடம் தேடிப்பார்த்து விட்டு புகார் கொடுத்தாக சொன்னார். காலம் 8ம் காலதாமதத்திற்கான காரணத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எந்தெந்த ஊர்களில் யார், யாரோடு, எந்தெந்த ஊர்களில் எந்த உறவினர்களோடு சேர்ந்து தனது தம்பியை தேடியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 26.08.2022 காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. காவல்நிலையத்திலிருந்து வேடசந்தூர்நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 22 கிமீ தொலைவில் உள்ளது. 1/2 மணியிலிருந்து 3/4 மணிக்குள் நீதிமன்றத்திற்கு ஜீப்பில் சென்றடையலாம். மோட்டார் சைக்கிளில் சென்றால் 3/4 மணி நேரத்தில் சென்றடையலாம். அன்றைய தினம் நீதித்துறை நடுவருக்கு தலைமை காவலர் ஈஸ்வரன் 906 என்பவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மாலை 04.20 மணிக்கு நடுவரை சென்றடைந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். ஆனால் காலை 10.30 மணிக்கெல்லாம் முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டு விட்டது. புகாரில் யார் சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் புகார்தாரரின் அப்பா உடன் வந்திருந்தார், ஆனால் சாட்சி கையொப்பம் போடவில்லை. வழக்கு புகாரானது நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் ,

**சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் , பின்னிட்டு காவல்துறை உயர் அதிகாரிகள் அறிவுறுத்தலின் படி வழக்கு புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.23 19:05:04 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.